பெறுநர். 22.09.2017
செயலாளர்,
டான்ஜெட்கோ,
144, அண்ணாசாலை,
சென்னை- 600 002

ஐயா,

பொருள் டான்ஜெட்கோ – வாரியத்தொழிலாளர்களின் பணிவிதிகள், நன்னடத்தை, விடுப்பு, ஒழுங்கு நடத்தை, மற்றும் மேல் முறையீட்டுக்கான விதிகள் அடங்கிய புத்தகம் - சங்கங்களுக்கு நகல் வழங்கிடக் கோருதல்.

30.06.2015 வரை திருத்தங்கள் செய்யப்பட்ட வாரியத் தொழிலாளர்களின் பணிவிதிகள், நன்னடத்தை, விடுப்பு, ஒழுங்கு நடத்தை மற்றும் மேல் முறையீட்டுக்கான விதிகள் அடங்கிய புத்தகம் அச்சடிக்கப்பட்டு தமிழகமெங்கும் உள்ள அலுவலகங்களுக்கு, விநியோகம் செய்திட தயார் நிலையில் உள்ளதாக அறிகிறோம்.

நிறுவனம் நன்றாகச் செயல்பட தொழில்அமைதி அவசியம். தொழில் அமைதி நிலவிட, வாரியவிதிகள் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்கள் நன்கு அறிந்து, அதன்படி செயல்பட வேண்டும் என்பதும் அவசியம்.

மேற்கண்ட விதிகளை, தொழிற்சங்கங்கள் நன்கு உணர்ந்து கொண்டால் மட்டுமே, நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்குமிடையே பாலமாக விளங்கி தொழில் அமைதியைப் பாதுகாக்கவும், மேம்படுத்திடவும் இயலும்.

எனவே, மேற்கண்ட விதிகள் அடங்கிய புத்தகங்கள் ஒவ்வொன்றும் 5 பிரதிகள் எங்கள் சங்கத்திற்கு வழங்கிட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

நகல் : தலைவர் நாமக்கல்.
செய்திமடல்.